# போதைப் பொருள் நடமாட்டம் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவதே முதல்வரின் இலக்கு!

## பேரவையில் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பதிலுரை... 13 ஆம் பக்கத் தொடர்ச்சி

மறந்துவிட்டு, ஏதோ இப்போது நடைபெறுவதைபோல ஒரு தோற்றத்தை உருவாக்குவதற்காக வெளியில் சென்று பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்தால், அது முழுவதுமாக live-வில் போகும். மக்களெல்லாம் பார்ப்பார்கள். இங்கு பேசினால் முழுமையாக கொண்டு சேர்க்க முடியாது என்பதனால் இந்த முயற்சியினை முன்னெடுத்திருக்கிறார்கள். நிச்சயமாக இந்த முயற்சி அவர்களுக்கு தோல்வியை தரும். எடுத்திருக்கின்ற ஒரு முயற்சி என்பது. ஒரு போதும் மக்கள் அவர்களுடைய முயற்சியை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தமிழ்நாட்டு முதலமைச்சர் தளபதி அவர்களுடைய இலக்கு, தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தமாக எந்தவிதமான போதைப்பொருள் நடமாட்டமும் இல்லாத ஒரு தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான் முதலமைச்சர் அவர்களுடைய இலக்கு. (மேசையை தட்டும் ஒலி)

அதேபோல, மது இல்லாத ஒரு மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்பதுதான் முதலமைச்சர் அவர்களுடைய இலக்கு. இங்கே பேசிய நத்தம் ஆர். விசுவநாதன் 2011 ஆம் ஆண்டு இதே மானியக் கோரிக்கையிலே உரையாற்றி இருக்கிறார். நான் இரண்டு தினங்களுக்கு முன்பாக அந்த உரையை எடுத்து நான் முழுவதுமாக வாசித்துப் பார்த்தேன். பதிலுரையிலே சொல்லுகிற போது அவர் அதில் சொன்ன பதில். ஒட்டுமொத்தமாக இந்தியா முழுவதும் மது இருக்கின்றபொழுது, நம்முடைய அருகாமை மாநிலங்களில் மது இருக்கின்றபோது, தமிழ்நாட்டில் மட்டும் மது விலக்கைக் கொண்டுவர முடியாது. ஒன்றிய அரசு நினைத்தால், அதனால் ஏற்படுகிற இழப்புகளை நிதியாக கொடுத்துவிட்டு, இந்தியா முழுவதும் கொண்டுவருகின்றபோது தமிழ்நாட்டிலும் அது பின்பற்றப்படும் என்று பதிலுரையில் சொன்னார். அதை நான் முழுமையாக படித்துப் பார்த்தேன். ஒரு அரசு எந்தளவிற்கு அக்கறை கொண்டு, ஒரு முதலமைச்சர் மக்கள்மீது எந்தளவிற்கு அக்கறை கொண்டு, இதிலே சிறப்புக் கவனம் செலுத்திக்கிறார்கள் என்று சொன்னால், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பள்ளிகள், கல்லூரிகள், கோயில்கள் இப்படி பல்வேறு இடங்களில் இருக்கக்கூடிய கடைகளை உடனடியாக மூட வேண்டுமென்று உத்தரவிட்டு, ஏறத்தாழ 103 கடைகள் தமிழ்நாட்டில் மூடப்பட்டிருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி). கூடுதலாக 500 கடைகள் முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில் மூடப்பட்டிருக்கின்றன. இப்படி பல்வேறு நிலைகளில் நடவடிக்கை எடுத்து. தமிழ்நாட்டை மது இல்லாத மாநிலமாக, தமிழ்நாட்டை போதை பொருள் இல்லாத மாநிலமாக உருவாக்குவதற்கான முயற்சிகளை முதலமைச்சர் எடுத்து, தொடர்ந்து அதை கண்காணித்து வருகிறார்கள். எனவே, வெளியிலே பேசுகின்றவர்கள் ஏதோ தமிழ்நாட்டில்மட்டும் மது விற்பனை இருப்பதுபோல, தமிழ்நாட்டில் இந்த மது விற்பனை மூலமாகத்தான் அரசு நடைபெறுவதுபோல சில அரசியல் இயக்கங்கள், தேர்தலை மனதிலே வைத்து மக்களிடத்திலே ஒரு அவப்பெயரை உருவாக்குவதற்கு, முயற்சிகளைச் செய்கிறார்கள். அதிலும் குறிப்பாக, நான்கு ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியில் முதலமைச்சர் அவர்களுடைய வளர்ச்சித் திட்டங்களை பொறுத்துக்கொள்ள முடியாமல், மக்கள் முதலமைச்சர் மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், இன்னும் ஒரு வருட காலம்தான் தேர்தலுக்கு இருக்கிறது. எப்படியாவது மக்களிடத்தில் ஒரு அவப்பெயரை அரசுக்கு உருவாக்கிட வேண்டுமென்கிற முனைப்போடு சில முயற்சிகளை முன்னெடுக்கிறார்கள். அந்த முயற்சி ஒருபோதும் அவரிடத்தில் எடுபடாது. மக்களும் அவர்களுடைய முயற்சிகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

குறிப்பாக, இங்கு இருக்கக்கூடிய சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் உட்பட இங்கிருக்கக் கூடிய பத்திரிக்கையாளர்கள் உட்பட நான் ஒரு கருத்தை இங்கே முன்வைக்க விரும்புகிறேன். சில நேரங்களில் பத்திரிக்கைகளிலும், தொலைக்காட்சிகளிலும் சமூக வலைத்தளங்களிலும்கூட டாஸ்மாக் நிறுவனத்தில் சில்லறை விற்பனைக் கடைகளில் கூடுதலாக 10 ரூபாய் விற்பனை செய்யப்படுவது என்பது ஏதோ இந்த நான்கு ஆண்டுகளில் நடைபெறுவதுபோல ஒரு தோற்றத்தை உருவாக்கி. அதன்மூலமாக அரசுக்கு ஒரு அவப்பெயரை உருவாக்குவதற்கான முழு முயற்சிகளை சமூக வலைத்தளங்கள், பத்திரிக்கைகள், சில தொலைக்காட்சிகள் இதை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர். நான் ஒரு சிறிய உதாரணத்தை மட்டும். நேரத்தின் அருமை கருதி இந்த நேரத்தில் முன்வைக்க விரும்புகின்றேன். 2016-2021 ஆகிய 5 ஆண்டுகளில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பத்து ரூபாய் கூடுதலாக வைத்து விற்பனை செய்து, பத்து ரூபாய்க்கு மேலும் கூடுதலாக வைத்து விற்பனை செய்யப்பட்ட வகையில் 15,405 வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. அதாவது 2016-2021 ஆகிய 5 வருடங்களில் நடந்தது. அப்போது நடந்து எல்லாம் பத்திரிக்கைகள், தொலைக்காட்சிகள், சமூக வலைதளங்களில் பேசப்படுவதில்லை. இப்போது ஏதோ இந்த நான்கு ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டு. அதன்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு. சில பணியாளர்கள் பணி இடமாற்றம் செய்யப்படுகிறார்கள். சிலர் பணி நீக்கம் செய்யப்படுகின்றார்கள். இதுபோன்ற நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. கடந்த 2016-2021 இல் 15,405 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு. அவர்களிடமிருந்து 14 கோடியே 83 இலட்சத்து 86 ஆயிரத்து 690 ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டிருக்கின்றன. இது கடந்த கால ஆட்சியில் நடந்தது. இப்போது இந்த நான்கு ஆண்டுகளில் எடுக்கப்பட்ட சீரிய நடவடிக்கையின் காரணமாக, ஏறத்தாழ 6 கோடியே 79 இலட்சத்து 86 ஆயிரத்து 47 ரூபாய் கூடுதலாக விற்பனை செய்த பணியாளர்களிடமிருந்து அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டு, மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு. சில பேர் பணியிட மாற்றம், சில பேர் பணியிடை நீக்கம் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, பத்திரிக்கையாளர்கள், தொலைக்காட்சியைச் சார்ந்திருக்கிறவர்கள், சமூக ஊடகத்தை சார்ந்திருக்கிறவர்கள் இது போன்ற தவறான அவதூறான செய்திகளை அரசின்மீது புழுதிவாரி தூற்றுவதைப்போல, முன்னெடுப்பதைக் கைவிட்டு முயற்சிகள் ஒரு போதும் எடுபடாது.

### அவதூறான கருத்துகள்!

குறிப்பாக, தமிழ்நாடு வாணிபக்கழகத்தை பொறுத்தவரை, திறந்த மனதுடன், வெளிப்படைத் தன்மையுடன் எந்தப் பணிகளாக இருந்தாலும் சரி, bar tender ஆக இருந்தாலும் சரி; transport tender ஆக இருந்தாலும் சரி; வெளிப்படைத் தன்மையோடு திறந்த மனதோடு, online tender இப்போது வந்துவிட்டது. யார் வேண்டுமானாலும் அதில் கலந்துகொள்ளலாம். யார் வேண்டுமானாலும் tender கோரலாம். திறந்த மனதோடு இந்த நிர்வாகம் செயல்பட்டு கொண்டிருக்கின்றன. அந்த வகையில், ஒட்டுமொத்தமாக இந்தியா முழுவதும் மதுவிலக்கு என்ற நிலை வருகின்றபோது, தமிழ்நாட்டில் நிச்சயம் நம்முடைய திராவிடமாடல் ஆட்சியினுடைய நாயகர் முதலமைச்சர் தமிழ்நாட்டிலும் அதை நடைமுறைப்படுத்துவார்கள். அதில் அரசு உறுதியாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பேரவைத் தலைவர் வாயிலாக பேரவைக்கு அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கருத்தை வெளியில் சென்று எதிர்க்கட்சித் தலைவர் பேசியிருக்கிறார். இதுபோல கருத்துகள் அதாவது 10 ரூபாய் கூடுதலாக விற்பனை செய்கிறார்கள், அதனால் இப்படியெல்லாம் நடந்திருக்கிறது என்கிற மாதிரியான அவதூறான கருத்துக்களை, உண்மைக்கு புறம்பான கருத்துக்களை வெளியில் சென்று பேசுவதை வாடிக்கையாக வைத்திருக்கின்றார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் இந்தச் செய்தியைப் பார்த்துக்கொண்டு, அவர்களுடைய ஐந்தாண்டுக்கால ஆட்சியில் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன; எவ்வளவு தொகை அபராதமாக வசூலிக்கப்பட்டது என்பதையும் தெரிந்துகொண்டு, அந்தக் கருத்துகளை முன்வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பேரவையில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

### மின்வாரிய இலக்கை முதல்வரிடம் ஒப்படைப்போம்!

தமிழ்நாடு மின்சார வாரியமாக இருந்தாலும் சரி, மின்சார வாரியத்தினுடைய உற்பத்தி ஒரு பக்கம் அதிகரிக்க வேண்டும். உற்பத்திக்கான, விநியோகத்திற்கான கட்டமைப்பை விரிவாக்கம் செய்ய வேண்டும். நம்முடைய சொந்த உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும். வெளியிலே கொள்முதல் செய்வது குறைக்கப்பட வேண்டும். முதலமைச்சர் அவர்களுடைய தெளிவான இலக்கு என்பது, நம்முடைய தேவையில்

50 சதவிகிதம் சொந்த உற்பத்தியாக இருக்க வேண்டும். 50 சதவிகிதம் நாம் சொந்தமாக உற்பத்தி செய்ய வேண்டும். அந்த 100 சதவிகித தேவையில், 50 சதவிகிதம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றலைக் கொண்டு நம்முடைய மின்சாரத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டுமென்று இந்தியாவிலேயே முதல் மாநிலமாக, தமிழ்நாடு மாநிலத்தில்

50 சதவிகிதம் என்ற இலக்கை முதலமைச்சர் நிர்ணயித்து தந்திருக்கிறார்கள். நிச்சயம், 2030 ஆம் ஆண்டுக்குள் இந்த இலக்கை எட்டி, முதலமைச்சர் அவர்களுடைய கரங்களிலே மின்சார வாரியத்திற்கு நிர்ணயித்த இலக்கை ஒப்படைப்போம் என்ற உறுதியை இந்த நேரத்தில் அன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள், எரிசக்தித் துறையில் 150 வெட்டுத் தீர்மானங்களையும், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) -ல் 109 வெட்டுத் தீர்மானங்களையும் கொடுத்திருக்கிறார்கள். எனவே, உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களின் பல்வேறு கருத்துகளுக்கு என்னுடைய உரையிலே பதில் இருந்திருக்கும். சில வெட்டுத் தீர்மானங்களுக்கு அறிவிப்பிலே பதில் இருக்குமென்று நான் நம்புகிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களுக்கும் சேர்த்து, முதலமைச்சர் அவர்களுடைய ஆணைக்கிணங்க, இரண்டு துறைகளின் சார்பில் இருக்கக்கூடிய புதிய அறிவிப்புகளை தற்போது வெளியிடுகிறேன்.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்ந்த அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

## மாணவர்களிடையே விழிப்புணர்வு! 603 கடைகள் மூடல்!

### அறிவிப்புகள்

### மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

**1) போதைப் பொருட்கள் பயன்படுத்துபவர்களைக் கண்டறிந்து விரைவான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமலாக்கப் பணியகம்-குற்றப் புலனாய்வுத் துறையின் பயன்பாட்டிற்காக 50 கையடக்க வாய்வழி திரவ மருந்து சோதனை சாதனங்கள் வழங்குதல்**

போதைப் பொருட்கள் பயன்படுத்துபவர்களைக் கண்டறிந்து மீது விரைவான சட்ட நடவடிக்கைகளை எடுக்கும்பொருட்டு, வேகம், துல்லியம் மற்றும் எளிய பயன்பாட்டினைக் கொண்ட கையடக்க வாய்வழி திரவ மருந்து சோதனை சாதனங்கள் (Hand held oral fluid drug testing devices), சென்னை நீங்கலாக 37 மாவட்டங்கள் மற்றும் சென்னை, தாம்பரம், ஆவடி, கோயம்புத்தூர், திருப்பூர், சேலம், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய 9 பெருநகரங்களில் உள்ள அமலாக்கப் பணியகம்-குற்றப் புலனாய்வுத் துறை அலுவலகங்களுக்கு தலா ஒன்று மற்றும் அமலாக்கப் பணியகம்- குற்றப் புலனாய்வுத் துறை தலைமையகத்திற்கு 4 என மொத்தம் 50 சாதனங்கள் வழங்கப்படும்.

**2) போதைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் சட்டவிரோத கடத்தலை ஒழிப்பதில் சிறப்பாகப் பணியாற்றியதற்காக காவல் துறை அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு வழங்கப்படும் தமிழ்நாடு முதலமைச்சர் காவல் துறை பதக்கங்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்**

காவல் துறை அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களை ஊக்குவிக்க, போதைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் சட்டவிரோத கடத்தலை ஒழிப்பதில் சிறப்பாகப் பணியாற்றியதற்காக 'தமிழ்நாடு முதலமைச்சர் காவல் துறை பதக்கம்' என்ற சிறப்பு பதக்கம் உருவாக்கப்பட்டு, அதனுடன் அன்பளிப்பு தொகையாக ரூபாய் 50,000/- கடந்த 2023 ஆம் ஆண்டு முதல் ஐந்து காவல் துறை அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு வழங்கப்படுகிறது. மேற்படி பதக்கங்கள் 2025-2026 ஆம் ஆண்டு முதல் ஆண்டுக்கு 15 என்ற எண்ணிக்கையில் உயர்த்தி வழங்கப்படும்.

**3) அமலாக்கப் பணியகம்-குற்றப் புலனாய்வுத் துறை பிரிவில் நிறுவப்பட்ட சைபர் ஆய்வகத்தைப் பயன்படுத்துவதற்கான டிஜிட்டல் தடயவியல் கருவிகள், OSINT (திறந்த மூல நுண்ணறிவு) கருவிகள், சமூக ஊடகங்கள் மற்றும் செய்தி பகுப்பாய்வு கருவிகள் வழங்குதல்**

ஆன்லைன் போதைப் பொருட்கள் கடத்தல், டார்க் நெட் சந்தைகள், கிரிப்டோகரன்சி பரிவர்த்தனைகள் மற்றும் டிஜிட்டல் போதைப் பொருட்கள் தொடர்பான குற்றங்களை எதிர்த்துப் போராட இணைய ஆய்வகம் (cyber lab) கருவிகள் இன்றியமையாததாக உள்ளது. எனவே, அமலாக்கப் பணியகத்தின் இணைய ஆய்வகம் (cyber lab) பயன்பாட்டிற்காக டிஜிட்டல் தடயவியல் கருவிகள், இருண்ட வலை கண்காணிப்பு மற்றும் OSINT (திறந்த மூல நுண்ணறிவு) கருவிகள்,

நெட்வொர்க் மற்றும் சைபர் அச்சுறுத்தல் நுண்ணறிவு கருவிகள், சமூக ஊடகங்கள் மற்றும் செய்தி பகுப்பாய்வு கருவிகள் ஆகியவை அமலாக்கப் பணியகம்-குற்றப் புலனாய்வுத் துறைக்கு ரூபாய் 50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**4) புலனாய்வு சேகரிப்பு பணிகளை கணினிமயமாக்குதல் மற்றும் அமலாக்கப் பணியகம்-குற்றப் புலனாய்வுத் துறையின் மத்திய புலனாய்வுப் பிரிவுக்கு (CIU) ஒரு பிரத்யேக இணையதள வலைவாயில் (web portal) நிறுவுதல்**

அமலாக்கப் பணியகத்தின் மத்திய புலனாய்வுப் பிரிவு (CIU), நுண்ணறிவு தகவல்கள் மற்றும் பல்வேறு புள்ளிவிவரங்களை களப் பிரிவுகளில் இருந்து சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளது. தினசரி புள்ளிவிவர அறிக்கைகள் மற்றும் களப் பிரிவுகளில் இருந்து உளவுத் தகவல்களைத் தானாகச் சேகரிப்பதற்கு ஒரு பிரத்யேக இணையதள வலைவாயில் (web portal) கட்டமைப்பது இன்றியமையாததாகும். எனவே, நுண்ணறிவு சேகரிப்பு பணியை கணினிமயமாக்குவதற்கும், தினசரி புள்ளிவிவர அறிக்கைகளை தானியங்கி முறையில் தயாரிக்க பிரத்யேக இணையதள வலைவாயில் (web portal) அமைப்பதற்கும் அமலாக்கப் பணியகம்-குற்றப் புலனாய்வுத் துறைக்கு ரூபாய் 35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**5) கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் கள்ள மதுபான விற்பனையில் ஈடுபட்டு, சிறைத் தண்டனை பெற்று விடுதலையாகி, மனந்திருந்தியவர்களுக்கு மறுவாழ்வு நிதி வழங்குதல்**

தமிழ்நாட்டில் கள்ளச்சாராயத்தை முற்றிலுமாக ஒழிப்பதற்கு, கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கள்ளத்தனமாக அயல்நாட்டு மதுபானங்கள், தெளிந்த சாராவி ஆகியவற்றை கடத்துதல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டு, சிறைத் தண்டனை பெற்று விடுதலையாகி மனந்திருந்தியவர்கள் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் இருக்க அவர்களை சுய தொழில்களில் ஈடுபடுத்தி, அதன்மூலம் அவர்களின் சமூக, பொருளாதார நிலை மற்றும் வாழ்வாதாரத்தை உயர்த்த, நபர் ஒருவருக்கு ரூபாய் 50,000/- மானியமாக வழங்குவதற்கு ஏதுவாக ரூபாய் 5.00 கோடி மறுவாழ்வு நிதி மானியமாக வழங்கப்படும்.

மேலும், இத்திட்டம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் ஆகிய துறைகளுடன் இணைந்தும் மற்றும் பல்வேறு துறைகள்மூலம் செயல்படுத்தப்படும் வாழ்வாதார திட்டங்கள் மூலமும், அவர்களுக்கான திறன் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஒருங்கிணைந்த திட்டமாகச் செயல்படுத்தப்படும்.

**6) கள்ளச்சாராயம், போலி மதுபானங்கள் மற்றும் போதைப் பொருட்களுக்கு எதிராக தீவிரமான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்துதல்**

தமிழ்நாட்டில் கள்ளச்சாராயம் அருந்துதல் மற்றும் போதைப் பொருட்கள் உட்கொள்வதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொது மக்கள் மற்றும் இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும்பொருட்டு, வருவாய்த் துறை, காவல் துறை, போக்குவரத்துத் துறை, பள்ளிக் கல்வித் துறை மற்றும் உயர் கல்வித் துறை ஆகிய துறைகளுடன் இணைந்து மாவட்டந்தோறும் விழிப்பு ணர்வு பிரச்சாரங்கள் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கு ரூபாய் 5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**7) தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மதுபான சில்லறை விற்பனைக் கடை பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குதல்**

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் 6,567 மேற்பார்வையாளர்கள், 14,636 விற்பனையாளர்கள் மற்றும் 2,426 உதவி விற்பனையாளர்கள், ஆக மொத்தம் 23,629 மதுபான சில்லறை விற்பனைக் கடை பணியாளர்கள் தொகுப்பூதிய முறையில் பணியாற்றி வருகிறார்கள். தற்போது வழங்கப்பட்டு வரும் தொகுப்பூதியம் மேற்பார்வை யாளர்களுக்கு ரூபாய் 2,000/-, விற்பனையாளர்களுக்கு ரூபாய் 2,000/- மற்றும் உதவி விற்பனையாளர்களுக்கு ரூபாய் 2,000/- என 1-4-2025 முதல் மாதந்தோறும் உயர்த்தி வழங்கப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு ரூபாய் 64.08 கோடி கூடுதல் செலவாகும்.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் பணியாற்றக்கூடிய அந்தத் தொழிலாளர்களுக்கு ஓர் ஆண்டில் உயர்த்தப்பட்ட உயர்வு என்பது இதுவே அதிகப்பட்ச உயர்வாகும். முதலமைச்சர் உயர்த்தி வழங்குவதற்காக அனுமதிகளை தந்து இருக்கிறார்கள். தமிழ்நாடு மின்சார வாரியம், எரிசக்தித் துறை மற்றும் உள் துறை மதுவிலக்கு சார்ந்த இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளையும் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின்பகிர்மான கழகம் மற்றும் தமிழ்நாடு பகிர்மான எரிசக்தி கழகம், மருத்துவர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்களுக்கும், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் லிமிடெட் டாக்டர் அனீஷ் சேகர், இ.ஆ.ப. அவர்களுக்கும், இணை மேலாண்மை இயக்குநர்/நிதி விஷீ மஹாஜன், இ.ஆ.ப. அவர்களுக்கும், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம் மரு. ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப. அவர்களுக்கும், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை தீராஜ் குமார், இ.ஆ.ப. அவர்களுக்கும், அரசு இணைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை திருமதி ஜா. ஆனி மேரி சுவர்னா, இ.ஆ.ப. அவர்களுக்கும், ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை திருமதி S.P. கார்த்திகா, இ.ஆ.ப. அவர்களுக்கும், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் S. விசாகன், இ.ஆ.ப. அவர்களுக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியக்கோரிக்கையில் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் பணியாற்றக்கூடிய வாய்ப்பை தந்த, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் என் வாழ்நாள் எல்லாம் போற்றி வணங்கக்கூடிய போற்றுதலுக்குரிய எங்களுடைய குடும்பத் தலைவர் பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் நான் நித்தம் வணங்கக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சருடைய மலர் பாதங்களில் என்னுடைய நன்றி மலர்களை பணிவன்போடு சமர்ப்பிக்கிறேன். எனக்கு பல்வேறு வகையிலும் ஆக்கத்தையும், ஊக்கத்தையும் தருகின்ற துணை முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைப் பணிவன்போடு சமர்ப்பித்துக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக உறுப்பினர்கள் அனைவரும் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப்பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தரு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அறிவித்துள்ளார்.

---

### சாத்தியக்கூறு இருக்குமாயின் நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்!

# கொல்லிமலை 'ஆகாய கங்கை' நீர் வீழ்ச்சிக்கு கம்பிவட ஊர்தி!

### சட்டப்பேரவையில் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் பதில்!

***சென்னை, ஏப்.24-***

***சட்டப். பேரவையில் நேற்று முன்தினம், கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-***

**

***கே. பொன்னுசாமி:*** *சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஆகாய கங்கை நீர் வீழ்ச்சிக்கு கம்பிவட ஊர்தி வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?*

***அமைச்சர் இரா. இராஜேந்திரன்:*** *சேந்தமங்கலம் தொகுதியிலுள்ள கொல்லிமலையில் இருக்கிற ஆகாய கங்கை நீர்வீழ்ச்சிக்கு கம்பிவட ஊர்தி வசதி செய்து தர ஆவன செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கான சாத்தியக்கூறுகள் மிக குறைவாக இருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

***கே. பொன்னுசாமி:*** *நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்டது கொல்லிமலை. சுற்றுலா தளமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆகாய கங்கை நீர்வீழ்ச்சிக்குச் செல்ல வேண்டுமானால் அரையடி படிகளாக மொத்தம் 1,200 படிகள் உள்ளன. அந்தப் படிகளை கடந்து தான் நீர்வீழ்ச்சியிலே குளிக்க முடியும். ஆகவே, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து ஆகாய கங்கை நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்கு rope car வசதி செய்து கொடுக்க கேட்டுக்கொள்கிறேன்.*

***அமைச்சர் இரா. இராஜேந்திரன்:*** *நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் மாவட்ட வன அலுவலர், நாமக்கல் மாவட்டத்திலிருக்கிற சுற்றுலாக் குழு இவர்களையெல்லாம் வைத்து இதுகுறித்து ஆய்வு செய்து அதற்கு சாத்தியக்கூறுகள் இருக்குமெனில் அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.*

***கே.பொன்னுசாமி:*** *சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மற்ற பிற மாநிலங்களிலிருந்தும் பாண்டிச்சேரி, கர்நாடகா, கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களிலிருந்து சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருகின்றார்கள். ஆகாய கங்கை நீர்வீழ்ச்சிக்கு 150 அடி உயரத்திலிருந்து நேரடியாக தண்ணீர் கொட்டுகிறது. அந்த தண்ணீரில் குளிப்பதற்கு 1,200 படிகள் இறங்கிதான் போய் குளிக்க வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கொல்லி மலையை நன்கு அறிந்தவர். ஆகவே, ஆகாய கங்கை நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்கு rope car வசதி செய்து கொடுக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.*

***அமைச்சர் இராஜேந்திரன்:*** *முதலமைச்சர் அவர்கள் தனியார் பங்களிப்போடு சுற்றுலாத் தளங்களை மேம்படுத்துவதற்கான அனுமதியை வழங்கியிருக்கி றார்கள். குறிப்பாக Austria நாட்டைச் சேர்ந்த Doppelmayr என்கிற நிறுவனம் கம்பிவட ஊர்தியை அமைப்பதற்கு தயாராக இருக்கிறார்கள்.*

*ஆனால், கொல்லிமலை ஆகாய கங்கை நீர்வீழ்ச்சிப் பகுதியில் அதற்கான சாத்தியக்கூறு இருக்கிறதா என்பதை ஆய்வு செய்து, சாத்தியக்கூறு இருக்குமாயின் அதை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.*

*இவ்வாறு விவாதம் நடைபெற்றது.*

---

திராவிடப் பாவேந்தர் பாரதிதாசன் நினைவைப் போற்றும் வகையில்

# 'தமிழ் வார விழா' அறிவித்த முதல்வருக்கு நன்றி!

### பாரதிதாசன் பேரன் - சேரன் அறிக்கை!

*புதுவை, ஏப்.24-*

*திராவிடப் பாவேந்தர் பாரதிதாசன் நினைவைப் போற்றிடும் வகையில் 'தமிழ் வார விழா' அறிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து பாரதிதாசன் அவர்களின் மகள் வழிப் பேரன் சேரன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-*

*தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவையில் 22.4.2024 அன்று என் தாத்தா பாவேந்தர் பாரதிதாசன் அவர்களது பிறந்த நாளை 'தமிழ் வார விழா' வாக அறிவித்து 29.4.2025 முதல் 5.5.2025 வரை அனைத்து நகரங்களிலும் தமிழ் விழாக்கள் நடைபெறும் என அறிவித்துள்ளார்.*

*'தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று பாடிய பாவேந்தர் அவர்களுடைய விழாவை தமிழ் வாரமாக அறிவித்துள்ளது எனக்குப் பெருமகிழ்ச்சி அளித்தது.*

*கடந்த வாரம் நான் ஒரு கவிதை எழுதி, அதில் 'பாவேந்தர் நாளே தமிழ் நாள்' என்று எழுதப்பட்ட அந்தக் கவிதையில், நெருப்பைக் கக்கிய நெடுந்தமிழ் சீற்றம் அறமெனும் அரசியல் இழந்தோரை இழித்த புரட்சிக் கவிஞர் நாளை தமிழ் நாளாகக் கொண்டாட வேண்டும் என கேட்டுக் கொண்டிருந்தேன்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த நாளை ஒருநாள் அல்ல; ஒரு வாரம் என்றாக்கி, என்றும் எப்போதும் தமிழுக்கும் தமிழ் உணர்வாளார்களுக்கும், தமிழ்க் கவிஞர்களுக்கும், திராவிட இன உணர்வாளர்களுக்கும் பெரும் மகிழ்வை உண்டு பண்ணியிருக்கிறார்கள். அதற்காக முதல்வர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*



பெரம்பலூர் நகர கழகம் சார்பில், கழகத்தலைவர், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம், பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. பெரம்பலூர் நகர கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், கழக துணைப் பொதுச்செயலாளர், நாடாளுமன்ற மேலவை உறுப்பினர், மாநிலங்களவை கழக குழுத் தலைவர் திருச்சி என்.சிவா எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், குன்னம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.